[4th November 1966

திரு. எஸ். முருகையன் : ஊராட்சி மன்றங்கள் ஏற்று நடத்தக் கூடிய மருந்தகங்கள், அதாவது பேராட்சி (மேஜர் பஞ்சாயத்து) மன்றங்களில் உள்ள மருந்தகங்கள் சரியாக, நல்ல முறையில் நடத்தப்படவில்லை என்பதால் சர்க்காரே உடனடியாக எடுத்து நடத்துவதற்கு முன்வருமா? பஞ்சாயத்து யூனியன்களில் பண வசதி இல்லாத காரணத்தாலே நல்ல முறையிலே நடத்த முடிய வில்லை. ஆகவே, அவற்றையெல்லாம் உடனடியாக அரசாங்கமே எடுத்துக்கொள்வதற்கு ஏற்பாடு செய்வார்களா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : பஞ்சாயத்து யூனியன் கள் நடத்துகின்றவற்றை அரசாங்கம் எடுத்துக்கொள்வதாக உத்தேசமில்லை.

திரு. வி. எஸ். எஸ். மணி : அங்கங்கே ரூரல் டிஸ்பென்சரிகள் இருக்கின்றனவே அவற்றை பிரைமரி ஹெல்த் சென்டர்களாக மாற்றுவதற்கு உத்தேசமுண்டா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : இல்லை.

* 417 கேள்வி.—**திரு. எஸ். ஜே. ராமசாமி :** கனம் சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப் பாரா—

தமிழகத்தில் உள்ள எல்லாப் பஞ்சாயத்து யூனியன்களில் உள்ள ரூரல் டிஸ்பென்சரிகள், கிராமங்களில் உள்ள மருத்துவ மனைகள் ஆகியவைகளைச் சர்க்காரே ஏற்றுக்கொள்ளும் உத்தேச முண்டா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : இல்லை. தற்போது அத்தகைய செயற் குறிப்பு எதுவும் இல்லை.

திரு. எஸ். ஜே. ராமசாமி : தலைவர் அவர்களே, இந்தப் பஞ்சாயத்து யூனியன்களால் நடத்தப்படுகின்ற டிஸ்பென்சரிகள் சரியாகச் செயல்படவில்லை. மருந்துகள் போதுமான அளவு கிடைப்பதில்லை. ஆகவே, சர்க்காரே அவற்றையெல்லாம் எடுத்துக் கொள்வதற்கு என்ன ஆட்சேபம் இருக்கிறது?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : பஞ்சாயத்து யூனியன் டிஸ்பென்சரிகள் அவர்களுடைய பொறுப்பிலேயே உள்ளவை. மருந்து தேவைப்படுகின்ற அளவை மாற்ற வேண்டுமென்றுதான் முன்பு 2,500 ரூபாய் கொடுத்து வந்ததை இப்பொழுது 5,000 ரூபாயாக உயர்த்தியிருக்கிறோம். அவர்கள் மருந்து பூராவும் தீர்ந்து போவதற்கு முன்பாகவே சரிவர இன்டென்ட் போட்டு மூன்று மாதங்களுக்கு முன்பாகவே அனுப்ப வேண்டும். அப்படி அனுப்பினால் மருந்துகள் கிடைக்கும். அப்படி அனுப்பக்கூடிய மருந்துகளுக்கான பணத்தையும் உடனடியாக அனுப்பி வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படிச் செய்தால் இந்த மாதிரிக் குறைகள் எல்லாம் இருக்காது.

4th November 1966]

திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் அவைத் தலைவர் அவர்களே, பஞ்சாயத்து யூனியன்களின் ரூரல் டிஸ்பென்சரிகளை இப்பொழுது ஏற்று நடத்துவதற்கான உத்தேசம் அரசாங்கத்திற்கு இல்லை என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். பொதுவாக சரியாக நடைபெறவில்லை என்ற குற்றச்சாட்டு சொல்லப்படுகிறது. ஆகவே, அவற்றை இனிமேலாவது ஏற்று நடத்துவதற்கு முயற்சி எடுத்துக்கொள்ளப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : பஞ்சாயத்து யூனியன்கள் நடத்துகின்ற டிஸ்பென்சரிகளில் அதிகப்படியான கஷ்டமிருந்து நடத்தவே முடியாது என்ற நிலையில் உள்ள பஞ்சாயத்து யூனியன் டிஸ்பென்சரிகளை எடுத்துக் கொள்ளலாமா என்பது பரிசீலனையில் இருக்கிறது. ஆனால், பொதுவாக அவையெல்லாம் பஞ்சாயத்து யூனியன்களின் பொறுப்பில்தான் இருக்க வேண்டும். எல்லாவற்றையும் எடுத்துக் கொள்வதாக உத்தேசமில்லை. பஞ்சாயத்து யூனியன்களுக்கும் பொறுப்பு இருக்க வேண்டுமென்பதற்காகத்தான் அவற்றை அரசாங்கம் எடுத்துக்கொள்வதற்கில்லை என்று சொன்னேன்.

Sri C. CHIRANJEEVULU NAIDU : Sir, the general answer given by the Government regarding the medicines that are to be supplied to the Panchayat Union dispensaries is that the Panchayat Union Commissioners are not remitting the amounts in advance to the M.S.D. In view of that, will the Hon. Minister request the Hon. Minister for Local Administration to issue necessary instructions to the Commissioners and see that the amounts are remitted in advance and indents are sent sufficiently before the close of the year?

The Hon. Srimathi JOTHI VENCATACHELLUM : That is what I exactly meant. It is on account of not remitting the amount in time to the M.S.D., the supply of medicines has been delayed. Now, there is a proposal before the Government, whether we can allot this amount straightaway to the M.S.D. to supply directly the medicines that are required by the dispensaries.

Employees' State Insurance Dispensary

* 418 *Q.*—Sri V. SANKARAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state whether it is a fact that there are no adequate number of doctors in the three newly built Employees' State Insurance Dispensaries at Madurai City?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : இல்லை.

திரு. வை. சங்கரன் : இந்த ஆஸ்பத்திரிகளில் சமீப காலம் வரை 9–30 a.m.
டாக்டர்களும், ஸ்டாஃபும் இல்லாமல் இருந்த காரணத்தால் தொழிலாளர் மருந்து பெறுவதற்குக் கஷ்டம் ஏற்பட்டது வாஸ்தவமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : இ.எஸ்.ஐ. ஆஸ்பத்திரிகளில் டாக்டர்கள் இல்லை என்ற குறை கிடையவே கிடையாது. ஆறு ஆஸ்பத்திரிகளுக்குப் பத்து டாக்டர்கள் போடப்பட்டிருக்